# நீங்கள் ஒரு நெருக்கடி நிலையிலிருந்து தற்காலிக வீடோ பாதுகாப்பிடமோ தேவைப் படுகிறதா?

உங்கள் அன்றாட வாழ்க்கையிலிருந்து சற்று இடைவெளி வேண்டுமா?

உங்களைப் புதிதாகப் பழக்கப்படுத்திக் கொள்வதற்காக ஒதுங்கியிருக்க விரும்புகிறீர்களா?

தங்குவதற்கு உங்களுக்கு இடம் வேண்டுமா?

உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் தற்காலிகமான வீடு தேடும் நிர்ப்பந்தம் உங்களுக்கு ஏற்படுகிறதா?

## டின் அடைக்கலம் தருதல்

உங்கள் தேசிய இனம், சமயம் அல்லது உங்கள் வருமானத்தைப் பொருட்படுத்தாமல் நாங்கள் உங்களை ஏற்றுக்கொள்வோம். பெருமளவாக 6 மாதங்களுக்கு உங்களுக்கு பாதுகாப்பான இடவசதி தருவோம். உங்களுக்குத் தனியாக ஒரு அறை கிடைக்கும். மற்ற பெண்களுடன் பொது அறைகளை உபயோகிப்பீர்கள்.
வருங்கால அம்சங்களை தெளிவு படுத்த உங்களுக்கு நேரம் இருக்கும். இதற்கு மேல் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் பற்றி அறிவிக்கவும், ஆலே–ாசனை கூறவும், ஊக்கமளிக்கவும் திறமைவாய்ந்த பெண் பணியாளர் உளர். உங்கள் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்–க்கவும், குறிப்பிட்ட துறைகளில் பயிற்சியுள்ள ஆலோசனை மையங்கள், அலுவலகங்கள், மருத்துவர், வக்கீல்கள், போன்றவர்களை அணுக உங்கள் தேவைகளைப் பற்றி கற்பிப்பதிலும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். அவசியமானால், விடுதியில் தங்குவதற்கான பண விவக–ாரங்களைப்பற்றி உங்களுக்குத் தெளிவு படுத்துவோம்.